*8*

# பாஷைகளில் பேசுதலும் பரிசுத்த ஆவியானவரும்

*“யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்” (1 கொரி. 14:27, 28).*

*பாஷைகளில் பேசுதல் என்பது பழைய ஏற்பாட்டில் அல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையாக உள்ளது.[1] இயேசு, “நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபி. 13:8) என்ற கூற்று, அவர் ஒவ்வொரு யுகத்திலும் ஒரேவிதமான அற்புத செய்கைகளை நிகழ்த்துகின்றார் என்று அர்த்தப்பட்டால், தேவனுடைய பின்பற்றாளர்கள், தாங்கள் கற்றறியாத பாஷைகளைப் படைப்பின் தொடக்கம் முதலே பேசியிருக்க வேண்டும். மேலும், பாஷைகளில் பேசுதல் என்பது மேன்மையான ஆவிக்குரிய தன்மையின் அடையாளமாயிருக்கிறதென்றால், இயேசு பாஷைகளில் பேசினார் என்று அறிவிக்கப்படாதிருத்தல் என்பது வினோதமானதாகக் காணப்படுகிறது. வேதாகம வரலாற்றின் நீண்ட காலகட்டத்தில், பாஷைகளில் பேசுதல் என்பது, பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் அப்போஸ்தலர்களால் ஒரே ஒருமுறை (அப். 2:1-11); புறஜாதியாருக்குக் கதவுதிறக்கப்பட்டபோது செசரியாவில் ஒருமுறை (அப். 10:44-46); மனமாற்றம் அடைந்த பன்னிரெண்டு பேர்களினால் எபேசுவில் ஒருமுறை (அப். 19:6); மற்றும் கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களாய் இருந்தவர்களினால் கொரிந்துவில் ஒருமுறை (1 கொரி. 12:10, 28; 13:8; 14:2-28) நிகழ்த்தப்பட்டது என்று மாத்திரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கொரிந்துவில் இருந்த சபை தவிர வேறு எந்த சபைக்குழுமத்திலும் இந்த நடைமுறை தொடர்ந்து இருந்தது என்று புதிய ஏற்பாட்டில் சுட்டிக்காண்பித்தல் எதுவும் இருப்பதில்லை.*

## பாஷைகளில் பேசுதல் என்றால் என்ன?

*Leshonah என்ற எபிரெய வார்த்தையானது, “நாவு” என்று - பேச்சை உண்டாக்கும் - உடல் உறுப்பு என்ற குறிப்பில் (நியா. 7:5; 2 சாமு. 23:2) -*

*அல்லது "பாஷை" என்று (எஸ். 1:22; 3:12; எரே. 5:15; எசே. 3:5, 6) மிகவும் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையாக உள்ளது. எபிரெய வார்த்தையான Leshonah என்பதற்கு glossa என்ற வார்த்தையே கிரேக்க மொழிபெயர்ப்பாக உள்ளது (ஏசா. 28:11ஐ 1 கொரி. 14:21 உடன் ஒப்பிடவும்; GK.: eteroglossois). Glossa என்பது நாவு என்ற உடலின் உறுப்பையோ அல்லது (மாற். 7:33, 35)[2], அக்கினிபோல் கூராகப் பாய்தல் (அப். 2:3) அல்லது பாஷை (அப். 2:4, 11; 10:46; 19:6) என்பதையோ அர்த்தப்படுத்துகிறது.*

*பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பாஷைகளில் பேசியதுதான் இதுபற்றிப் பதிவு செய்யப்பட்ட முதல் நிகழ்ச்சியாக உள்ளது. இது அப்போஸ்தலர்கள் ஒரு பாஷையில் பேசி, அது பலபாஷைகளில் புரிந்துகொள்ளப்பட்ட நிகழ்ச்சியாயிராமல், பல்வேறுபட்ட பாஷைகளில் பேசுதல் என்ற அற்புதமாக இருந்தது (அப். 2:4-11). அப்போஸ்தலர்கள் "பற்பல பாஷைகளில்" அல்லது பிற பாஷைகளில் பேசியதால், (அவர்கள் பேசியதை) மக்கள் கூட்டத்தார் தங்கள் சொந்த பாஷைகளில் கேட்டனர் (அப். 2:4). இது அங்கிருந்த விசுவாசமற்ற யூதர்களுக்கு, மிகவும் நம்பி இணங்கத்தக்க ஒரு அடையாளமாக இருந்தது (1 கொரி. 14:22).*

*இதைத் தொடர்ந்து, பேதுரு மற்ற அப்போஸ்தலர்களுடன் எழுந்து நின்று கூட்டத்தாரிடம் பேசத் தொடங்கினார் (அப். 2:14). கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும், அவர் பேசியதைப் புரிந்து கொண்டனர் என்பது, அவர் ஒருபாஷையில் பேசி, அந்த உரையானது பலபாஷைகளில் புரிந்து கொள்ளப்பட்டது என்று அர்த்தப்படுவதில்லை. பல்வேறு நாடுகளில் இருந்து எருசலேமுக்கு வந்திருந்த யூதர்கள் (அப். 2:5-11) இருபாஷைக்காரர்களாய் இருந்தனர்; பேதுரு எபிரெய மொழியில் பேசியபோது அதை அவர்கள் புரிந்து கொள்ள முடிந்தது.*

*பிந்திய ஒரு நிகழ்ச்சியில் (அப். 20:16) பவுல், எருசலேமில் யூதர்களின் கூட்டம் ஒன்றிற்குப் பன்மொழிப் பின்னணியுடன் உள்ள யூதர்களிடத்தில் உரைநிகழ்த்தினார் (அப். 21:27). அவர்கள் எபிரெய மொழியைத் தக்க வைத்துக் கொண்டிருந்தபடியால், அவர்களிடத்தில் அவர் எபிரெய ஜென்ம பாஷையில் பேசிய போது, அதை அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது (அப். 21:40).*

## பாஷைகளில் பேசுதல் பற்றிப் பவுல் போதித்தது என்ன?

*1 கொரி. 14ல் பயன்படுத்தப்பட்டபடியாக, glossai (glossa என்பதன் பன்மைச் சொல்) "பாஷைகள்" என்பதைப் பவுல் பயன்படுத்தியது பற்றிய தற்கால விவாதமானது முன்மொழியப்பட்ட நான்கு அர்த்தங்களைச் சுற்றிச் சுழலுகிறது: (1) வானத்திற்குரிய பாஷைகள், (2) ஒரு மொழியைக் கொண்டிராத பரவச உச்சரிப்புகள், (3) மிகவும் கற்றறிந்தவர்களால் மாத்திரம் புரிந்துக் கொள்ளப்படக்கூடிய பன்முகத்தன்மை கொண்ட/பல்திறனறிவுகொண்ட பேச்சு அல்லது, (4) பேசியவருக்குப் புரியக்கூடிய அல்லது புரியக்கூடாத*

*தான மனித பாஷை. இவற்றில் நான்காவதாக முன்மொழியப்பட்ட அர்த்தமே சரியானதாக இருக்கக்கூடும்.*

*அப். 2:4, 11ன் பாஷைகள் என்பவை, எருசலேமில் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்க வந்திருந்த யூதர்களின் ஜென்ம பாஷைகளா யிருந்தன என்பது உறுதி. அந்த நாளில், அந்நிய பாஷைகளைக் கற்றறிந் திராத அப்போஸ்தலர்கள், அங்கிருந்த பல்வேறு நாட்டவரின் பாஷை களைப் பேசினார்கள். அவர்கள் glossai களில் ("பாஷைகள்"; அப். 2:11) பேசினார்கள், அவை, dialektos ("வட்டார மொழி" என்ற நேரடி அர்த்தம் கொண்டது, "பாஷை" [அப். 1:19; 2:6, 8] மற்றும் "ஜென்ம பாஷை" [அப். 21:40; 22:2; 26:14] என்று மொழிபெயர்க்கப்பட்டது) என்றும் அழைக்கப்பட்டன. புதிய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடர்கள், அறியப்பட்ட மொழிகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*வெளி. புத்தகமானது, உலகத்தின் பல்வேறு மொழிப்பிரிவுகள் அல்லது குழுக்களைக் குறிப்பதற்கு glossai என்ற சொற்றொடரைப் பயன்படுத்து கிறது (வெளி. 5:9; 7:9; 10:11; 11:9; 13:7; 14:6; 17:15). இங்கு இந்தச் சொற்றொடர், பரலோக பாஷைகளையோ, பரவசப்பேச்சையோ அல்லது ஜெப மொழிகளையோ குறிப்பதில்லை.*

*1 கொரி. 14ல் பவுல் பரலோக பாஷைகள், பரவச மொழிகள் (உணர்வு எழுச்சிக்கு ஆட்பட்ட நிலையில், பரவச நிலையால் மேற்கொள்ளப்படும் மக்களால் உச்சரிக்கப்படும் பாஷைகளற்ற உச்சரிப்பு), அல்லது மிகவும் கற்றறிந்தவர்களால் மாத்திரம் புரிந்துகொள்ளப்படக்கூடிய பன்முகத் தன்மை கொண்ட/பல்திறனறிவுகொண்ட பேச்சு என்று அர்த்தப்படு மென்றால், அவர் glossai என்ற வார்த்தைக்கு வேதாகமத்தில் வேறெங்கும் பயன்படுத்தப்பட்டிராத ஒரு விளக்கத்தைப் பயன்படுத்துகின்றார் என்றா கிறது. Glossai என்ற வார்த்தைக்கான பவுலின் பயன்பாட்டில் அவர் மனித பாஷைகளையே அர்த்தப்படுத்தினார் என்பது பின்வரும் உண்மைகளினால் தெளிவாகிறது:*

*1. "பாஷைகள்" என்பவை பரிசுத்த ஆவியானவரின் வரமாயிருந்தது என்று பவுல் போதித்தார் (1 கொரி. 12:10), இதைத் தேவன் சபையில் வைத்திருந்தார் (1 கொரி. 12:10, 11, 28).*

*2. பாஷைகளில் பேசுதல் என்பது போதிக்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் (1 கொரி. 14:6).*

*3. பாஷைகளில் பேசுதல் என்பது அவிசுவாசிக்கு அடையாளமாயிருந் தது (1 கொரி. 14:22). அற்புதங்கள் சில நடைபெற்றன என்று அவிசுவாசி தீர்மானிக்க இயலாதிருந்தால், அவருக்கு பாஷைகளில் பேசுதல் என்பது தேவனுடைய அற்புத வல்லமைக்கான அடையாளமாயிருக்க முடியாது.*

*4. பாஷைகள் என்பவை பேசுகின்றவரின் பக்திவிருத்திக்கானவை களாய் இருந்தன (1 கொரி. 14:4) அல்லது அவை வியாக்கியானம் செய்யப் பட்டால், சபையின் பக்திவிருத்திக்கானவைகளாய் இருந்தன (1 கொரி. 14:5). வச. 4ல் பவுல், சுயபக்திவிருத்திக்காக சபையில் அந்நிய பாஷைகளில் பேசுவதற்கு அனுமதியளிக்கவில்லை. அதற்கு நேர்மாறாக அவர், வியாக்கியானம் செய்யப்படாவிட்டால் பாஷைகளில் பேசுதல் என்பது*

*பேசுபவருக்கு மாத்திரமே பயனளிப்பதாயிருக்கும் என்று சுட்டிக் காண்பித்தார். பிற்பாடு அவர், வியாக்கியானம் செய்பவரின்றி ஒருவரும் சபையில் (அந்நிய பாஷையில்) பேசக்கூடாது என்று உரைத்தார் (1 கொரி. 14:28), ஏனெனில் சபையார்கள் தாங்கள் புரிந்துகொள்ளாத விஷயங்களின் மூலம் பக்திவிருத்தி அடைய முடியாது (1 கொரி. 14:5).*

*பவுலின் கூற்றுப்படி, சபைகூடுதலின்போது செய்யப்பட்ட ஒவ்வொரு செயலும், தனிநபரின் பக்திவிருத்திக்கேதுவாக அல்ல, ஆனால் சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவாகவே செய்யப்பட வேண்டியதாக இருந்தது (1 கொரி. 14:5, 12, 26). அந்நிய பாஷைகள் என்பவை அர்த்தமற்ற பரவசப் பேச்சுக்களாக இருந்தன என்றால், அவைகள் வியாக்கியானம் செய்யப்பட இயலாது மற்றும் அவற்றினால் சபையானது பக்திவிருத்தியடைய முடியாது.*

*5. கொரிந்து நகரில் பாஷைகளில் பேசுதல் பற்றி மேற்கோள் காண்பிக்க (1 கொரி. 14:21) பவுல் பயன்படுத்திய ஏசாயா 28:11ன் பாஷைகள் என்பவை அந்நியபாஷைகளாய் இருந்தன. இந்த "பாஷைகள்" என்பவை பரவச உச்சரிப்புக்களாகவோ அல்லது தூதர்களின் பாஷைகளாகவோ இருக்கவில்லை.*

*6. கிரேக்கச் சொல்லான hermeneus என்பது - முன்னிணைப்புச் சொற்கள் உட்பட அதன் தொடர்பு வடிவங்களுடன்[3] - "விளக்கப்படுத்த," "விளக்கப்படுத்துதல்," அல்லது "விளக்கப்படுத்துபவர்" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையானது, அறிந்த வார்த்தைகளை உண்மையான மொழியொன்றில் மொழிபெயர்த்தலைக் குறிக்கிறது. லூக். 24:47 மாத்திரமே இந்த விதிக்கு ஒரு விதிவிலக்காக உள்ளது, அதில் கேட்டுக்கொண்டிருந்தவர்களால் புரிந்துகொள்ளப்படாத வசனப் பகுதிகளை "விவரித்தல்" என்பது அர்த்தமாயிருக்கிறது. இது, 1 கொரி. 14ன் "பாஷைகள்" என்பது விளக்கம் அளிக்கப்படக்கூடிய மொழிகளாயிருந்தன என்பதை மறைமுகமாய் உணர்த்தும்.*

*வியாக்கியானம் செய்த எல்லாரும், வியாக்கியானம் செய்வதற்கான தங்களது திறமையைப் பரிசுத்த ஆவியானவரின் உதவியால் பெற்றுக் கொண்டனரா அல்லது அவர்கள் ஏற்கனவே கற்றிருந்த மொழிகளில் தங்களுக்குள்ள சுய புரிந்துகொள்ளுதல்மீது சார்ந்திருந்தனரா என்பது பற்றிப் புதிய ஏற்பாட்டில் உரைக்கப்படுவதில்லை. பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் திறமை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அந்த வியாக்கியானம் ஞானம் கிடைக்கப்பெறும் வழிமுறைமைகள் எப்போதுமே தரப்படுவதில்லை (1 கொரி. 14:27, 28). இது, மொழியைக் கற்றறிந்தவர், வியாக்கியானம் பண்ணுவதற்கு பரிசுத்த ஆவியானவரால் பலன் தரப்பட்ட ஒரு நபரைப் போன்றே விளக்கம் தரமுடியும் என்று மறைமுகமாக உணர்த்துகிறது (1 கொரி. 12:10, 11) ... ஒரு மொழியைக் கற்றறிந்தவர் அந்த மொழியில் விளக்கம் அளிக்கும் திறன் பெற்றுள்ளார் என்பதானது பாஷைகள் என்பது அறியப்பட்ட மொழிகளாயிருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன.*

*இந்த வசனப்பகுதியின் வரையறைச் சட்டமானது ஒரு அந்நிய நாட்டில் ஒரு சுவிசேஷ ஊழியரின் ஊழியம் நடைமுறைப்படுத்தப்படுவதா*

*யிருக்கும். கூட்டத்தில் உள்ள எவரும் பேசுபவரின் மொழியை விளக்கப் படுத்த இயலாத நிலையில் இருந்தால், அவர் மவுனமாயிருக்க வேண்டும். அவரது வார்த்தைகள் புரிந்து கொள்ளப்படாத வரையில், அவற்றைக் கேட்பவர்கள் பயனடைய மாட்டார்கள்.*

*ஒரு உரையானது மொழிபெயர்க்கப்படுவதற்கு முன்பு அது அர்த்தம் உடையதாக இருக்க வேண்டும். அர்த்தமற்ற பரவசப் பேச்சுகள் விளக்கம் தர இயலாதவைகளாக உள்ளன. கொரிந்து சபையில் பேசப்பட்ட பாஷைகள் மொழிபெயர்க்கப்பட முடியும் என்று பவுல் சுட்டிக்காண் பித்தது (1 கொரி. 14:5, 13, 27), பாஷைகளில் பேசுதல் என்பது உண்மையான மொழிகளை உள்ளடக்கிற்று என்று அர்த்தப்படுத்துவதாக இருக்க வேண்டும்.*

## பாஷைகளில் பேசுதலின் நோக்கம் என்னவாக இருந்தது?

*சிலர், 1 கொரி. 14:2ல் உள்ள "பாஷைகள்" என்பவை, ஒருவராலும் புரிந்துகொள்ள இயலாத, தூதர்களின் பாஷைகளாக அல்லது ஜெப பாஷை களாக இருந்தன என்று முடிவு செய்கின்றனர். அப்படிப்பட்ட முடிவானது, அதிகாரம் 14ன் எஞ்சிய பகுதியில் பவுல் தமக்குத் தாமே முரண்படுபவர் என்பதாகக் கூடியதாயிருக்கும். இவ்வசனம் பற்றி, ஃபிரெட் ஃபிஷர் அவர்களின் கவனிப்பு சரியானதாக உள்ளது: "இது எவரொருவரும் அவரது கூற்றைப் புரிந்துகொள்ளவில்லை என்று அர்த்தப்படுத்த அவசியமில்லை, ஆனால் அங்கிருந்தவர்களில் ஒருவரும் அவரது கூற்றைப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தப்படுத்துகிறது."[4]*

*பாஷைகளில் பேசுதல் பற்றிப் பவுல் 1 கொரி. 14ல், பின்வரும் அறிவுறுத் தல்களைக் கொடுத்தார், இவைகள், இந்த வரமானது செய்தித்தொடர்பு நோக்கத்திற்கானது என்று சுட்டிக்காண்பிக்கின்றன:*

*1. பாஷைகளுக்கு வியாக்கியானம் செய்தல் என்பது சபையின் பக்தி விருத்திக்கானதாக இருந்தது (வச. 5). இந்த உண்மையின் அடிப்படையில், பாஷை பேசுபவருக்குத் தரப்பட்ட தகவலானது அர்த்தமற்ற உளறல் களாகவோ அல்லது அவரது சுயபயனுக்கானதாகவோ இருந்ததில்லை, ஆனால் அந்தத் தகவலானது சபையைக் கட்டி எழுப்புவதற்கானதாக இருந்தது என்று நாம் முடிவு செய்ய இயலும். இது சபைக்குழுமத்திற்கென்று வியாக்கியானம் செய்யப்படவில்லை என்றால் பேசுபவர்(அவர் தாம் பேசும் மொழியைப் புரிந்து கொண்டிருந்தால்), அவர் மாத்திரமே பக்திவிருத்தி யடைய இயலும். பாஷைகளில் பேசுபவர், சபைக்குழுமத்திற்குப் பக்தி விருத்தியூட்டுவதற்கென்று வியாக்கியானம் செய்யும் திறனுக்காக ஜெபிக்க வேண்டியவராயிருந்தார் (வசனங்கள் 5, 12, 13).*

*2. பாஷைகளில் பேசுதல் என்பது "... இரகசியங்களை வெளிப்படுத்து வதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக் கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது" ஏதுவாக, சபைக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார் (1 கொரி. 14:6).*

*இந்தக் காட்சியமைவில் தேவனிடத்திலிருந்து வந்த செய்திகளே வெளிப்படுத்துதலாக, அறிவாக, தீர்க்கதரிசனமாக மற்றும் போதகமாக இருந்தன (1 கொரி. 12:8, 10, 28-30). செய்திகள், சபையார் புரிந்துக்கொள்ளக் கூடிய மொழியில் அணிசெய்யப்பட்டால் மாத்திரமே இப்படிப்பட்ட செய்திகளினால் அவர்கள் பயனடைய முடியும். இவ்விடத்தில் பவுல், ஜெப பாஷைகள் அல்லது தூதர்களின் பேச்சுக்கள் பற்றிக் கூறியதாகக் குறிப்பு எதுவும் இல்லை.*

*3. யூதர்களை ஆராதனைக்கோ அல்லது யுத்தத்திற்கோ அழைப்பதற்கு, இசைக்கருவிகளில் ஏற்ற வகையிலான ஒலிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிருந்தது போலவே, பாஷைகளும் அவற்றைக் கேட்பவர்களுக்கு உதவியாயிருக்கும்படி குறிப்பிட்ட செய்தியை வழங்குவதாக இருக்க வேண்டும் (வச. 7, 8). கேட்பவர்கள் புரிந்துகொள்ளும்படியான ஒலிகளைப் பேசுபவர் ஏற்படுத்த வேண்டும்; இல்லையென்றால் பேசப்பட்டது என்ன என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள் (வச. 9).*

*4. உலகத்தில் பல மொழிகள் (GK.: phonon, இது "ஒலிகள்" என்று அர்த்தப்படுகிறது; வச. 10) உள்ளன. பயனுள்ள ஒலிகளும் மொழிகளுமே அர்த்தம் நிறைந்த செய்தியை அளிக்கின்றன. மொழியானது பழக்கமற்றதாக இருந்தால், கவனித்துக் கேட்பவர் ஒரு அந்நியர் பேசுவதைக் கவனித்தல் என்பதை விட அதிகமான எதையும் புரிந்துகொள்ளமாட்டார் (வச. 11).*

*5. கவனித்துக் கேட்பவர் "ஆமென்" என்று கூறுவதன்மூலம் தமது இருதயப்பூர்வமான ஒப்புதலைக் கொடுக்கக்கூடிய வகையில் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பதே பாஷைகளின் நோக்கமாக உள்ளது. (பேசப்படும்) பாஷையைப் புரிந்துகொள்ளாத ஒருவர், கூறப்பட்டது என்ன என்பதைப் புரிந்துகொண்டிராத காரணத்தினால், "ஆமென்" என்று கூற இயலாது (வச. 16).*

*Idiotes என்ற வார்த்தையானது ("idiot" என்ற வார்த்தையை நாம் இதிலிருந்தே பெற்றுள்ளோம்) வச. 23 மற்றும் 24ல் "கல்லாதவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது போதிக்கப்படாதவர் அல்லது திறமை யற்றவர் என்று அர்த்தப்படுகிறது (அப். 4:13; 2 கொரி. 11:6). பாஷைகளில் பேசுதல் என்பது அந்த குறிப்பிட்ட பாஷையில் கல்வியறிவுடையவரால் புரிந்துகொள்ளப்படும் ஆனால் அந்தப் பாஷையைக் கற்றறியாதவர் அதைப் புரிந்துகொள்ள இயலாது என்பது இங்கு மறைவான கருத்தாக உள்ளது. இதிலிருந்து நாம், பாஷைகள் என்பவை மொழிகள் என்றும் அந்த மொழிகளில் பேசக் கற்றவர்கள் எவ்வித வியாக்கியானமும் இன்றி புரிந்துகொள்ளக் கூடியவைகளாக உள்ளன என்றும் முடிவுசெய்யமுடியும்.*

*6. பாஷைகளில் பேசுதல் என்பது அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருந்தது (வச. 22). கேட்டுகொண்டிருப்பவர்களில் சிலர், பாஷைகளில் பேசுதல் என்பது தேவனால் கொடுக்கப்பட்ட மொழிகளாயிருக்கின்றன என்று தீர்மானிக்க முடியாவிட்டால், ஏற்படுத்தப்படும் ஒலிகள் ஒரு அடையாளமாக இருக்க முடியாது. (பெந்தெகொஸ்தே நாளன்று கூடிவந்திருந்த பலதேசத்தவர்களின் மொழிகளில் அப்போஸ்தலர்கள் பேசியதையும் பலத்த காற்று வீசுவதுபோன்ற சத்தத்தையும்) யூதர்கள் கேட்டனர் என்பது,*

*இயேசு தேவனுடைய வலதுபாரிசத்தில் சிங்காசனத்தில் அமர்த்தப் பட்டதற்குச் சான்றாக இருந்தது என்று பேதுரு கூறினார் (அப். 2:4-11, 33). விசுவாசமற்ற இந்த யூதர்களுக்கு பாஷைகள் என்பவை மனதில் பதியும் அடையாளமாக இருந்தது.*

*அப்போஸ்தலர்களின் உரைகளைப் பற்றி யூதர்கள், "நாம் நம்முடைய பாஷைகளில் இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கி றோமே'' என்று கூறினர் (அப். 2:11ஆ). பரவச உரைகளோ அல்லது மனிதர்களால் பேசப்படாத பாஷையோ அவர்கள் இப்படிக் கூறும்படித் தூண்டியிருக்க இயலாது. அந்தக் கலிலேயர்கள், தாங்கள் கற்றறியாத பாஷைகளில் பேசியது போன்ற அப்படிப்பட்ட உரையானது மக்களைப் பிரமித்து ஆச்சரியப்படச் செய்திருக்காது (அப். 2:7). அந்த நாளில் அப்போஸ் தலர்கள் பேசிய பாஷைகள் ஒவ்வொன்றும், அவர்கள் மூலமாகத் தேவனே பேசினார் என்பதற்கு நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு "அடையாளமாக" இருந்தது.*

## *பாஷைகளில் பேசுதல் என்பதில் ஜெபங்கள் அல்லது தூதரின் பாஷைகள் அடங்கியுள்ளனவா?*

*இன்றைய நாட்களில் பாஷைகளில் பேசுவதாக உரிமைகோருபவர்கள், அந்நிய நாடுகளில் போதிக்கும்போது, தாங்கள் போதிக்கின்ற அந்நிய நாடுகளில் வழங்கப்படும் மொழிகளில் பேசுவதற்குப் பதிலாக, அர்த்தம் சொல்பவர்களைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அர்த்தம் சொல்பவர் களைப் பயன்படுத்துவது குறித்துக் கேள்விகேட்கும்போது, அவர்கள் அந்நியபாஷைகளில் பேச முடியாதிருத்தல் என்ற இக்கட்டான நிலையி லிருந்து தப்பிப்பதற்கு, "பாஷைகள்" என்பவை ஜெப பாஷைகளாக அல்லது தூதரின் பாஷைகளாக உள்ளன என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் 1 கொரி. 14:28ஆ வில் உள்ள ''சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்'' என்ற சொற்றொடரைச் சார்ந்துள்ளனர். இருப்பினும், மிகவும் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகிற இவ்வசனமானது, அர்த்தம் சொல்லுகிற வரைக் கொண்டிராத ஒரு நபர் "சபையில் பேசக்கூடாது" என்றும் உரைக் கிறது. இது சபைகூடுகையில் தேவனிடம் உரத்த குரலில் பிதற்றுவதை அனு மதிப்பதில்லை. "பேசக்கூடாது" (இது ஆங்கிலத்தில் "silent" என்றுள்ளது) என்ற வார்த்தையானது, எவ்விதத்திலும் ஒலியெழுப்பக்கூடாது என்று அர்த்தப்படுகிற sigao என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க் கப்பட்டுள்ளது (லூக். 9:36; 20:26; அப். 12:17; 15:12, 13 ["பேசுவதை நிறுத்துதல்"]; ரோம. 16:25 ["இரகசியம்"]; 1 கொரி. 14:28, 30, 34).*

*பாஷைகளில் பேசுவதாக உரிமை கோருபவர்களில் பலர், கூறப்பட்டது என்ன என்பதைச் சாத்தான் புரிந்துகொள்ளாதபடி தடைசெய்வதற்காக ''ஜெப பாஷைகளாக'' இருத்தல் என்பதே பாஷைகளின் நோக்கமாக உள்ளது என்று சொல்லுகின்றனர். சாத்தானால் பாஷைகளைப் புரிந்து கொள்ள முடியாது என்று அவர்கள் எவ்வாறு அறிகின்றனர்? தேவனிடத்*

*திலிருந்து வந்த வெளிப்படுத்துதல் எதுவும் இவ்வாறு கூறுவதில்லை.*

*பாஷைகளில் பேசுபவர், அர்த்தம் சொல்லுகிறவர் இல்லாதபோது, தமக்கும் தேவனுக்கும் மாத்திரம் தெரியும்படிக்கு (சபையில் உள்ளவர்கள்) அறிந்திராத மொழியில் பேசலாம் என்று 1 கொரி. 14:28ம் வசனம் கூறுவதில்லை. அவர் தம்மால் புரிந்துக்கொள்ளக்கூடிய மொழியில் தேவனுடன் செய்தித் தொடர்பு கொள்ள வேண்டும் என்றே இவ்வசனப்பகுதி அர்த்தப்படுகிறது. அவர் தாமே அந்த பாஷையைப் புரிந்துகொள்ளவோ அல்லது அர்த்தம் சொல்லவோ முடியுமென்றால், அர்த்தம் சொல்லுகின்றவர் அங்கிருப்பார். அவர் முதலில் பேசி, பின்பு சபையில் உள்ளவர்கள் பயன்பெறும்படி, அர்த்தம் சொல்லுவார். அவரால் அர்த்தம் சொல்ல முடியாவிட்டால், அவர் தமக்குத் தாமே கூறுவது என்னவென்றோ அல்லது அவர் தேவனிடத்தில் என்ன கூறுகின்றார் என்றோ அவர் புரிந்துகொள்ள இயலாதே.*

*பாஷைகள் பேசுவதாகக் கூறித்திரியும் குழுவினரில் பெரும்பான்மையானவர்கள், அர்த்தம் சொல்லுவதற்கு ஆவியானவரின் வரம்பெற்றவர்களைக் கொண்டிருப்பதாக நம்புகின்றனர். இது உண்மையாக இருக்குமென்றால், அவர்களில் எவரும் தமக்கும் தேவனுக்கும் மாத்திரம் தெரியும்படிக்கு பாஷைகளில் தனிப்பட்ட ஜெபங்களை ஜெபிக்கக் கூடாது. அவர்களின் சொந்த தர்க்கத்தின்படி, அர்த்தம் சொல்லுகின்றவர் இல்லாத நிலையில்தான் இது நடைபெற வேண்டும்.*

*அன்பு இல்லாத நிலையில் வரங்கள் அர்த்தமற்றவைகளாக உள்ளன என்று வலியுறுத்துவதற்காகப் பவுல், 1 கொரி. 13:1-3ல் கற்பிதக் கூற்றுக்களைப் பயன்படுத்தினார். கொரிந்து சபையில் இருந்த எல்லாரைக் காட்டிலும் அவரால் அதிகமான பாஷைகளைப் பேச முடிந்திருப்பினும் (1 கொரி. 14:18), அவர் தூதரின் பாஷையைத் தாம் பேசுவதாகவோ, எல்லா இரகசியங்களையும் அறிந்துள்ளதாகவோ, மலைகளைப் பேர்க்கத்தக்கதாக விசுவாசம் கொண்டிருந்ததாகவோ. ஏழைகளுக்கு உணவளிக்கத் தமது உடமை யாவற்றையும் கொடுத்திருந்ததாகவோ, அல்லது தமது உடலைச் சுட்டெரிக்கக் கொடுத்ததாகவோ கூறவில்லை. அதுபோலவே, அவர் ஜெபிக்கையில் தமது சிந்தையானது அந்தஜெபத்தைப் புரிந்துகொள்ளாதிருந்த நிலையில், தமது ஆவியில் ஜெபித்ததுடன் பாஷையில் ஜெபித்ததாகக் கூறவில்லை. இதற்கு நேர்மாறாக, அவர் ஆவியோடும் கருத்தோடும் ஜெபித்ததாகக் கூறினார் (1 கொரி. 14:15). அவர்கள் புரிந்துகொள்ள இயலாத பாஷையில் ''பதினாயிரம்'' வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும் மற்றவர்களுக்கு அறிவுறுத்த அவர் "ஐந்தே வார்த்தைகளை"ப் பயன்படுத்துவது தமக்கு விருப்பமாயிருக்கும் என்று கூறினார் (1 கொரி. 14:19).*

## பாஷைகளில் பேசுதல் என்பது அந்நிய பாஷைகளை உள்ளடக்குகிறதா?

*1 கொரி. 12 மற்றும் 14ம் அதிகாரங்களில் உள்ள பாஷைகளில் பேசுதல்*

*என்பது ஜெபங்களாக அல்லது வானத்திற்குரிய பாஷைகளாக மாத்திரமே உள்ளன என்று முடிவு செய்தலானது, பாஷைகள் பேசுபவர்களை, அவர்கள் அறியாத மொழிகளைப் பேசும் மக்களிடத்தில் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பேசக்கூடியவர்களாய் இருப்பதிலிருந்து விடுவிப்பதில்லை. பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் இதையே செய்தனர் (அப். 2:4-11). ஆழமான விசுவாசமோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் வரமோ, அப்போஸ்தலர்கள் செய்தது போல் அதே திறனைத் தரக்கூடுமென்றால், பாஷைகளில் பேசுபவர்கள் தங்கள் சுய சோதனையில் தோல்வியடை கின்றனர். அவர்கள், தங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு ஒரு அடையாள மாக, தாங்கள் ஒருக்காலும் கேள்விப்பட்டிராத, படித்திராத அல்லது போதிக்கப்பட்டிராத பாஷைகளில் பேசமுடியாதென்றால், அப்போஸ்தலர் கள் செய்ததை அவர்களால் செய்ய முடியாதென்றே ஆகிறது. பெந்தெ கொஸ்தே நாளில் இருந்த பாஷைகளில் பேசுதல் என்பது இப்போது ஒழிந்துபோயிற்று; இல்லையென்றால், பாஷைகளில் பேசுபவர்கள் எந்த நாட்டுக்கும் போய் அந்த நாட்டு மொழியைப் படிக்காமலேயே பேசமுடியுமே. பரிசுத்த ஆவியானவர் இப்போதும், பேசுபவர் அறிந்திராத ஆனால் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய பாஷையில் பேசக்கூடிய திறமையைக் கொடுக்கக்கூடிய வல்லமை கொண்டுள்ளார். அப்போஸ்தலர்கள் செய்ததை மக்கள் திரும்பச் செய்ய இயலாது என்றால், அப்படிப்பட்ட பாஷைகளில்பேசுதல் ஒழிந்துபோயின என்றே அர்த்த மாகிறது.*

*பாஷைகளில் பேசுவதாகக் கூறித் திரிபவர்கள், பிறமொழிபேசும் குழுக்களிடத்தில் உரையாற்ற, அவர்களுக்கு அர்த்தம் சொல்லுகின்றவர்கள் தேவை என்ற உண்மையானது, அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த பாஷைகளில் பேசும் திறனைக் கொண்டி ருப்பதில்லை என்பதற்கு ஆதாரமாக உள்ளது. அப்போஸ்தலர்கள் கற்றறிந் திராத மொழிகளைப் பேசிய மக்களுடன் செய்தித்தொடர்பு கொள்ளும் திறமையைத் தேவன் அப்போஸ்தலர்களுக்கு அளித்தார். அப்படிப்பட்ட வரத்தைத் தேவனால் கொடுக்க இயலாது என்பதினால் அல்ல, ஆனால் பாஷைகளில் பேசுதல் என்பது ஒழிந்துபோனதால்தான் இந்தச் செயலை இன்றைய நாட்களில் செய்யத்தவறுதல் என்பது உள்ளது. இது ஒழிந்து போகாதிருந்தால், கற்றறிந்திராத மொழிகளில் மற்றவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பது பேசுபவரால் இன்றைக்கும் தொடரப்பட வேண்டும்.*

*பாஷைகளில் பேசுவதாகக் கூறித் திரியும் சபைகளில் உள்ள பெண்கள், வழக்கமாக சபைகூடிவருகையில் அடிக்கடி - அல்லது ஆண்களைவிட அதிகமாக - பேசுகின்றனர். பவுல், "சபைகளில் உங்கள் ஸ்திரிகள் பேசாம லிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும் ... ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கிய மாயிருக்குமே" என்று எழுதினார் (1 கொரி. 14:34, 35). பெண்கள் பேசும்படி கட்டாயப்படுத்தப்பட முடியாது, ஏனெனில் "தீர்க்கதரிசிகளுடைய ஆவி கள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே" (1 கொரி. 14:32). பவுல் கர்த்த*

ருடைய கட்டளையை எழுதினார் (1 கொரி. 14:37).

அர்த்தம் சொல்லுகின்றவர்கள் இல்லாமல், சபைக்குழுமத்தில் உள்ள அனைவரும் ஒரேவேளையில் அந்நிய பாஷைகளில் பேசிக்கொண்டிருந்தால், அதைப் புரிந்துகொண்டிராத அவிசுவாசிகள், அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று நினைப்பார்கள் (வச. 23). இதற்குப்பதிலாக, தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள், கேட்டுக்கொண்டிருப்பவர்களால் புரிந்துக்கொள்ளக்கூடிய மொழியில் ஒருவர்பின் ஒருவராகப்பேசி, மூன்றுக்கு மேற்பட்டவர்களை அனுமதிக்காதிருந்தால் இதற்கு எதிரானது (அவிசுவாசிகள் அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று நினைப்பதற்கு எதிரானது) உண்மையாயிருக்கும் (வச. 24, 31). பாஷைகளில் பேசியவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பேசவேண்டியிருந்தது, மூன்றுபேருக்கு மேற்பட்டவர்களை அனுமதிக்கக் கூடாதிருந்தது. மேலும், யாரேனும் ஒருவர் அர்த்தம் சொல்ல வேண்டியிருந்தது. அர்த்தம் சொல்லுபவர்கள் இல்லாதிருந்தால், பாஷைகளில் பேசுபவர்கள் அமைதியாயிருக்க வேண்டியதாயிருந்தது (1 கொரி. 14:27, 28).

பவுலின் கூற்றுப்படி, பாஷைகளில் பேசுதல் என்பது குறைவான வரங்களில் ஒன்றாக இருந்தது (1 கொரி. 14:5), இது பாஷைகளில் பேசுதல் என்பதும் அர்த்தம் சொல்லுதல் என்பதும் வரங்களின் பட்டியலில் எப்போதும் அடியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்ற உண்மையிலும் பிரதிபலிக்கிறது (1 கொரி. 12:10, 30). முக்கியத்துவத்தின் வரிசைமுறையில் வரங்களைப் பவுல் பட்டியலிட்டபின்பு, “முக்கியமான வரங்களை நாடுங்கள்” என்பதே அவரது புத்திமதியாக இருந்தது (1 கொரி. 12:31அ). பின்பு அவர், 1 கொரி. 13ல் அன்புதான் அதிகம் மேன்மையான வழி என்று காண்பித்தார்.

## பாஷைகளில் பேசுதல் என்பது எப்போது ஒழிந்து போக வேண்டியிருந்தது?

“பாஷைகளில் பேசுதல் ஒழிந்துபோக வேண்டியதிருந்ததா?” என்பதல்ல ஆனால், “பாஷைகளில் பேசுதல் எப்போது ஒழிந்துபோக வேண்டியதிருந்தது?” என்பதே கேள்வியாக உள்ளது. பாஷைகளில் பேசுதல் ஒழிந்துபோகும் என்று 1 கொரி. 13:8 தெளிவாக உரைக்கிறது.

பவுல் 1 கொரி. 13ல், ஆவியானவரின் வரங்களைக் காட்டிலும் அன்பு அதிகம் மேன்மையானது என்று காண்பித்தார் (1 கொரி. 12:31ஆ). அவரது தர்க்கங்கள் பின்வருமாறு இருந்தன: (1) அன்பு இல்லையென்றால், பாஷைகள் என்பவை வெறும் சத்தங்களாகவே உள்ளன (வச. 1). (2) அன்பு இல்லையென்றால், விசுவாசம் மற்றும் அறிவு என்ற தெய்வீகத்துவ அளிப்பைப் பெற்றவர்கள் ஒன்றுமற்றவர்களாகவே உள்ளனர் (வச. 2). (3) அன்பு இல்லையென்றால், ஒருவர் தமது உடமைகளை ஏழைகளுக்குக் கொடுத்தலும் வேதசாட்சியாக மரித்தலும்கூட ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது (வச. 3). (4) அற்புதவரங்கள் ஒழிந்து போகும் என்றிருக்கையில் அன்பு நிலைநிற்பதாயிருக்கும் (வச. 8, 13).

*நிறைவானது வரும்போது, தீர்க்கதரிசனம் உரைத்தல், பாஷைகளில் பேசுதல் மற்றும் அறிவு ஆகிய யாவையும் ஒழிந்துபோக வேண்டியவைகளாய் இருந்தன (1 கொரி. 13:8-10). விளக்கியுரைப்பதில் பவுல், தம்மைப் பச்சிளம் குழந்தைப் பருவத்தில் இருந்த சபையுடன் ஒப்பிட்டார். இந்த வரங்கள் யாவும், ஒரு குழந்தை என்ற வகையில் பவுல் உடமையாக வைத்திருந்த பொம்மைகள் போன்றிருந்தன, ஆனால் அவர் (பூரண வயதுள்ள) மனிதரானபோது அவற்றைப் புறம்பே போட்டுவிட வேண்டியவராக இருந்தார் (1 கொரி. 13:11). மற்றும் அவர், வரங்களைப் பயன்படுத்துதல் என்பது அந்த நாட்களில் தெளிவான உருவத்தைக் கொடுத்திராத கண்ணாடியில் மங்கலாகக் கண்ணோக்குதலை முகமுகமாகக் காணுதலுடன் வேறுபடுத்தி ஒப்பிட்டார். ஆவிக்குரிய அற்புத வரங்கள் பச்சிளம் குழந்தையின் நிலையில் இருந்த சபைக்குத் தேவைப்பட்டிருப்பினும், சபையானது பக்குவமடையத் தேவையான யாவையும் அளிக்கப்பட்ட பின்பு அவைகள் (வரங்கள்) ஒழிந்துபோகும்.*

*''நிறைவானது'' (teleios;[5] 1 கொரி. 13:10) என்ற வார்த்தையின் அர்த்தமானது இவ்வசனப்பகுதியைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானதாக உள்ளது. இது இன்றைய நாட்களில் நாம் இவ்வார்த்தையைச் சிலவேளைகளில் பயன்படுத்துவதுபோல், "தவறற்றது" என்று அர்த்தப்படுவதில்லை, ஆனால் அதற்குப்பதிலாக முடிவை அல்லது முழுமையான வளர்ச்சிநிலையை அடைந்திருத்தல் - "பூரணரான" நிலையில் இருத்தல் (மத். 19:21; கொலோ. 1:28) அல்லது "பக்குவமடைதல்" (1 கொரி. 2:6; 14:20; எபே. 4:13; எபி. 5:14) என்று அர்த்தப்படுகிறது.*

*சபையானது முழுமையான வளர்ச்சிநிலையை அடையத் தேவையான யாவற்றையும் கொடுத்தல் என்பதே வரங்களின் நோக்கமாக இருந்தது. இதைச் சாத்தியமாக்குவதற்குப் பல்வேறு உதவிகள் அளிக்கப்பட்டன (எபே. 4:11-13). கொரிந்தியர்கள், பக்குவமடைந்த நிலைக்கு வந்து சேருவதற்குப்பதிலாக ஆவிக்குரிய வகையில் குழந்தைகளாகவே இருந்தனர் (1 கொரி. 3:1, 2). அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வரங்களினுடைய பயன்களை அறுவடை செய்யத் தவறியிருந்தனர்.*

*ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருப்பதால் தங்களை மேன்மையானவர்களாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள், வரங்கள் என்பவை தங்களில் ஒரு முடிவானவையல்ல, ஆனால் பச்சிளம் குழந்தையின் நிலையில் இருந்த சபையானது வளர உதவுவதற்கான ஊன்றுகோல்களாகவே இருந்தன என்பதை உணர்ந்தறிய வேண்டும். கிறிஸ்தவர்கள் பக்குவமடையத் தேவையான யாவற்றையும் பெற்றபின்பு, வரங்கள் ஒழிந்துபோக வேண்டியவைகளாய் இருந்தன.*

*கிறிஸ்தவ வளர்ச்சியும் மேம்பாடும் வசனத்தைச் சார்ந்திருந்தன (1 பேது. 2:2), வசனத்தின் மூலமாகத்தான் மக்கள் இயேசுவை அறியமுடியும் (2 பேது. 3:15-18) மற்றும் அவரது நிறைவான வளர்ச்சிக்குத் தக்கதாக வளருதலை நாட முடியும் (எபே. 4:11). வெளிப்படுத்தும் வரங்கள் (தீர்க்கதரிசனம் கூறுதல், பாஷைகளில் பேசுதல் மற்றும் அறிவை உணர்த்துதல் ஆகியவை) வசனத்தை முழுமையாகக் கொடுக்கும்வரை,*

சபையானது தேவனுடைய வசனத்தைப் பற்றிய அறிவில் பக்குவமடைய முடியாதிருந்தது.

தேவனுடைய எல்லா வெளிப்படுத்துதலும் இந்த வரங்களின் மூலம் கொடுக்கப்பட்டிருந்தபோது, சபையானது எவ்வாறு முழுமையடைந்ததாக இருப்பதென்று கற்றுக்கொள்ளத் தேவையான யாவற்றையும் கொண்டிருக்கும். அந்தக் காலம் வந்தபோது, வெளிப்படுத்தும் வரங்கள் ஒழிந்து போவதாயிருந்தன. இது சட்ட (ரீதியான) புதிய ஏற்பாடு முழுமையடைந்த போது நடைபெற்றது. அதற்குப்பின்பு, புதிய தீர்க்கதரிசனமோ, தெய்வீகமாய் அளிக்கப்பட்ட அறிவோ அல்லது பாஷைகளின் மூலம் வெளிப்பாடோ தரப்படவில்லை. சபையின் முழுமையான மேம்பாட்டிற்கு அவசியமான ஒவ்வொரு போதனையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதவாக்கியங்கள், "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும். எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக," சபைக்குத் தேவையான யாவற்றையும் முழுமையாக அளிக்கிறது (2 தீமோ. 3:16).

பவுல் 2 தீமோ. 3:16, 17ஐ எழுதியபோது, வேதவசனங்களின் வெளிப்படுத்துதல் முடிந்திருந்தது என்று நம்பியிருக்க வேண்டியிருந்தது இல்லை. அவரது கூற்றானது, அந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்டிருந்த பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு வேதவசனங்களையும் மற்றும் அத்துடன் தொடர்ந்து எழுதப்பட்ட எந்த வேதவசனங்களையும் உள்ளடக்கியிருக்கக் கூடும். பவுல் இவ்வசனங்களை எழுதுவதற்கு முன்பு, எழுதியபோது மற்றும் எழுதியதற்குப் பின்பு உண்டான வெளிப்படுத்துதல் ஒவ்வொன்றும் நமக்குத் தேவையான எல்லா சத்தியத்தையும் அளிக்கிறது.

பவுல், "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது" என்றுரைத்தார் (1 கொரி. 13:9). இது "பாஷைகள் பேசுதல்" என்பதையும் உள்ளடக்கியிருக்கக் கூடும், ஏனெனில் "பாஷைகள் பேசுதல்" என்பது "தீர்க்கதரிசனம்" மற்றும் "அறிவு" ஆகியவற்றைக் கொடுப்பதற்கான ஊர்திகளில் ஒன்றாக இருந்தது (1 கொரி. 14:6).

அந்த வேளை வரையிலும் கொடுக்கப்பட்டிருந்த வெளிப்படுத்துதல் பகுதியானதாகவே இருந்தது. இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள *merous* என்ற கிரேக்க வார்த்தையானது ஒரு பங்கு, முழுமையடையாத் தன்மை, "முழுமை என்பதற்கு நேர் எதிரான வகையில் பகுதித்தன்மை" என்று அர்த்தப்படுகிறது.[6] *Merous* என்ற வார்த்தை லூக். 11:36; 15:12; யோவா. 19:23; அப். 5:2 ஆகிய வசனங்களிலும் உள்ளது.

பகுதியாயிருந்தது நிறைவாகுவதற்கான காலம் வரவேண்டியதாக இருந்தது; அப்போது குறைவாயிருந்தது ஒழிந்துபோக வேண்டியதாயிருந்தது. தீர்க்கதரிசனம், பாஷைகளில் பேசுதல், மற்றும் தெய்வீகத்துவமாக வெளிப்படுத்தப்பட்ட அறிவு ஆகியவை அவற்றின் - சபையானது முழுமையடையத் தேவையான யாவற்றையும் அளித்தல் என்ற - நோக்கத்தை நிறைவேற்றியிருந்தபோது, இந்த வரங்கள் யாவும் ஒழிந்து போவதாயிருந்தன.

"குறைவானது" மற்றும் "நிறைவானது" (முழுமையானது) என்ப

*வற்றிற்கு இடையில் நேர்மாறு உள்ளது. வெளிப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவை "குறைவானது" என்பதாயிருந்தால் (1 கொரி. 13:9). "நிறைவானது" என்பது "குறைவானதை" நிறைவுசெய்வதாக இருக்கும், அதாவது, நிறைவான அறிவாகவும் நிறைவான தீர்க்கதரிசன மாகவும் இருக்கும். பூரணப்பட்ட நிலையான பரலோகம், இயேசுவின் வருகை மற்றும் அன்பு ஆகியவை இங்கு சிந்தனையின்கீழ் இருப்பதில்லை.*

*பவுல் 1 கொரி. 13:1-8ல் அன்பைப் பற்றிக் கலந்துரையாடியிருந்தாலும், அவர் இதை வரங்களின் சந்தர்ப்பப் பொருளில் (1 கொரி. 12-14. ) செய்தார், வச. 8ல் அவர் மீண்டும் இந்தப் பாடக்கருத்திற்கே திரும்பினார். சபைக் குள்ளாக அன்பின் மேம்பாடு என்பது வரங்கள் ஒழிந்து போவதைத் தீர்மானிப்பதில்லை. மாறாக, சபை பக்குவமடையத் தேவையானவற்றை அளித்தல் என்ற இந்த வரங்களின் நோக்கத்தை இவை நிறைவேற்றியிருந்ததால், இந்த வரங்கள் ஒழிந்துபோக வேண்டியவைகளாய் இருந்தன.*

*தேவனுடைய வசனமானது முழுவதுமாக வழங்கப்பட்டு முடிந்தவுடன், அது அற்புதமான அடையாளங்களால் (மாற். 16:20; அப். 14:3; எபி. 2:3, 4), பாஷைகளில் பேசுதல் உட்பட (1 கொரி. 14:22) உறுதிப்படுத்தப்பட்டது. வெளிப்படுத்துதல் முடிந்து நின்றுபோனவுடன், அற்புத அடையாளங்களும் நின்றுபோயின, ஏனெனில் அவைகள் தங்கள் நோக்கத்தைச் செய்திருந்தன.*

## முடிவுரை

*சில நிகழ்ச்சிகளில் தேவன், பேசுபவர்கள் கற்றறிந்திராத மொழிகளை, அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாகவும் தமது வசனத்தை வெளிப் படுத்துவதற்கும் பயன்படுத்தினார் (அப். 2:11; 10:46; 1 கொரி. 14:6. 22). இந்த பாஷைகளைக் கற்றறியாதவர்கள் இவ்வாறு பேசப்படுதலைக் கேட்பார்கள் என்றால், அவர்கள் பக்திவிருத்தியடையத்தக்கதாக இந்த பாஷைகளுக்கு அர்த்தம் சொல்லப்படாத பட்சத்தில் இவ்வாறு இந்த பாஷைகளைப் பேசவேகூடாது (1 கொரி. 14:16). பாஷைகளில் பேசுதலும் மற்ற அற்புத வரங்களும் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றியபோது, அவைகள் யாவும் ஒழிந்து போயின.*

*ஜிம்மி ஜிவிடென் அவர்கள் தனது "Glossolalia: From God or Man?" என்ற புத்தகத்தில் பின்வரும் முதன்மைத் தலைப்புக்களை முன்வைத்தார்:* "The Need of the Gift Ceased," "Means of Obtaining Gifts Ceased," and "Paul Predicted the End of Gifts."[7] *இந்தக் கருத்துக்கள், பாஷைகளில் பேசுதலும் மற்ற அற்புத வரங்களும் ஒழிந்து போயின என்பதற்கான ஆதாரத்தை நன்கு தொகுத்துரைக்கின்றன.*

*இப்பொழுது, தேவனுடைய வசனமானது முழுமையாக வெளிப் படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அடையாளங்கள் அவசியமற்றவைகளாக உள்ளன (மாற். 16:20). அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைப்பதன் மூலமாக வரங்களை அளித்துச் சிறப்பிக்க, அவர்கள்*

*இன்னமும் நம்மிடையில் இருப்பதில்லை (அப். 8:14-18; 19:6). வரங்கள் ஒழிந்துபோகும் என்று பவுல் கூறினார் (1 கொரி. 13:8-10), மற்றும் இது அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்த கடைசி நபர் மரித்தபோது நடந்தது.*

---

*குறிப்புகள்*

*[1]ஒரு சந்தர்ப்பத்தில் நாம், பாலாமின் "கழுதையின் வாயைக் கர்த்தர் திறந்தார்" மற்றும் அது பேசிற்று என்று வாசிக்கின்றோம் (எண். 22). [2]லூக். 1:64; 16:24; அப். 2:26; ரோம. 3:13; 14:11; 1 கொரி. 14:9; பிலி. 2:11; யாக். 1:26; 3:5, 6, 8; 1 பேது. 3:10; 1யோவா. 3:18; வெளி. 16:10 ஆகிய வசனங்களையும் காணவும். [3]மத். 1:23; மாற். 15:22, 34; லூக். 24:27; யோவா. 1:38, 41, 42; 9:7; அப். 4:36; 9:36; 13:8; 1 கொரி. 12:10, 30; 14:5, 13, 26-28; எபி. 7:2.* [4]Fred Fisher, *Commentary on 1 & 2 Corinthians* (Waco, Tex.: Word Books, 1975), 220. [5]*"ஆங்கிலத்தில்,* perfect *என்ற வார்த்தை மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது; இதற்கான கிரேக்க வார்த்தை தன்னிலேயே பக்குவமான, முழுமையான, நிறைவான என்று அர்த்தப்படுகிறது"* (Robert G. Bratcher, *A Translator's Guide to Paul's First Letter to the Corinthians* [New York: United Bible Societies, 1982], 128). [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt, F. Wilbur Gingrich, and Frederick W. Danker (Chicago, Ill.: University of Chicago Press, 1979), 506. [7]Jimmy Jividen, *Glossolalia: From God or Man?* (Fort Worth, Tex.: Star Bible Publications, 1971), 144-47.